# J/UDUPPIDDY GIRLS' COLLEGE
# VALVETTITHURAI

# ANNUAL PRIZE DAY - 2018

# Principal's Report

**President**
**Mrs.Gowry Sethurajah**
**(Principal)**

**Chief Guest**
**Prof.S.Srisatkunarajah**
**(Professor in Mathematics, Former Dean- Faculties of Science & Technology, University of Jaffna)**

05.05.2018

# பாடசாலைக் கீதம்

**பல்லவி**

எங்களது கல்லூரி வாழ்க – உடுப்பிட்டி

பெண்களது கல்லூரி வாழ்க, வாழ்க

எங்களது கல்லூரி வாழ்க!

**சரணங்கள்**

சீலம் செழிக்கும் உயர் தெய்வ சிந்தனையொடு

ஞாலம் புகழ் கற்பு நாற்குண நலங்களும்

காலம் கடந்து வர கலைகளும் பயிலவே

கருணையே அவதாரமாய் வந்த கடவுளே

எங்களது கல்லூரி வாழ்க!

நல்லார் இணக்கமோடு நற்போத ஞானமும்

சொல்லிலே வாய்மையும் தூய்மை பொலி சாந்தமும்

எல்லா அறங்களிலும் ஏற்றமும் வளரவே

இறைவனின் திருநாமம் இதயத்தில் மிளிரவே

எங்களது கல்லூரி வாழ்க!

ஆனந்த மயமான அன்புநிறை சூழலில்

அகிலகுல சிறுமணிகள் அனைவோரும் இசைவுகொள

எளிமைபுணர் இளமை செறி கலைகள் அழகுவிரி

ஒளியெங்கணும் காண ஒளியையே ஈகின்ற

எங்களது கல்லூரி வாழ்க!

# Mission

"Through developing empowerment of the teachers to absob in the globalization and increasing the resorces to keep the enthusiastic environment of the school, teach the students, good education and the knowledge of Information Teachnology & Human Values inorder to produce them as good citizens".

# Vision

"To produce disciplined and cultured soiety through
the systematic educational activities"

# Motto

"Lighted to give light"

# வருடாந்த பரிசளிப்பு விழா – 2018 அதிபர் அறிக்கை

எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக வருகை தந்திருக்கும் மதிப்பிற்குரிய பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா (Professor in Mathematics, Former Dean of Science and Technology, University of Jaffna) அவர்களே அவர்தம் துணைவியார் திருமதி சிவராணி சிறீசற்குணராஜா(Senior Lecturer in Linguistics, Former Head Department of Linguistics and English, University of Jaffna) அவர்களே வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.சிவபாதம் நந்தகுமார் ஐயா அவர்களே, பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் திருமதி அ. பார்த்திபன், கல்வித்திட்டமிடல் திரு இ. தமிழ்மாறன், கல்வி அபிவிருத்தி, திருமதி ரா. நிர்மலன், கல்வி முகாமைத்துவம் திரு உ.சுரேஸ்குமார், உதவிக்கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திரு க.பத்மகாந்தன் அவர்களே உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜ.இராஜசீலன் அவர்களே கோட்டக்கல்வி அதிகாரி திரு A.K.யோகநாதன் அவர்களே எமது பாடசாலையின் பிரதி அதிபர்கள் திருமதி ஆ.சிவகுமாரன், திருமதி ஸ்ரீ.சுபேந்திரன் ,திரு.இ.சுதர்சன் அவர்களே பாடசாலையின் முன்னை நாள் அதிபர்கள் திருமதி L.M.N யோசப் திருமதி ந. சந்திரசேகரம் அவர்களே வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கௌரவ M.K சிவாஜிலிங்கம் , கௌரவ S.சுகிர்தன், கௌரவ S. அகிலதாஸ் , கௌரவ K. தர்மலிங்கம், கௌரவ V. சிவயோகன், சிவன் அறக்கட்டளை நிலைய ஸ்தாபகர் திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களே எமது பாடசாலையின் பகுதித் தலைவர்களே ஆசிரியர்களே, அலுவலக ஊழியர்களே, இளைப்பாறிய ஆசிரியர்களே, அயற்பாடசாலையின் அதிபர்களே, ஆசிரியர்களே பழைய மாணவசங்கத் தலைவி செல்வி S.வேலுப்பிள்ளை அவர்களே, பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு பி. ருவேந்திரா அவர்களே, பழைய மாணவர்களே, பெற்றோர்களே, எமது பாடசாலை மாணவர்களே உங்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கம்.

பிரதம அதிதி அவர்கள் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தந்தையார் வெளிநாட்டு ஓய்வூதியத் திணைக்களத்தில் நிதி உதவியாளராகக் ( Financial Assistant) கடமையாற்றியவர். கல்வியறிவு மிக்க இவரது குடும்பத்தில் இவரது சகோதரர்கள் நால்வர் பொறியியலாளர்கள் ன்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது ஆரம்பக்கல்வியை தரம் 1 – 2 வரை யா/கரணவாய் தாமோதர வித்தியாலயத்திலும் தரம் 3 – 6 வரை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் பின்னர் யா/ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று, யாழ் பல்கலைக்கழகம் சென்றார். அங்கு விஞ்ஞானப் பட்டதாரியாக [B.SC . Mathematics

(Hons) 1979 -1983] முதலாம் வகுப்பில் சித்தியடைந்தார். பின்னர் அவரது திறமையின் நிமித்தம் புலமைப்பரிசில் பெற்று இங்கிலாந்து Heriot – Watt University Edinburgh இற்கு தெரிவு செய்யப்பட்டு கலாநிதிப்பட்டத்தை 1988 இல் பெற்றார். இளவயதில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1983 – 1985 காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற் துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமை புரிந்து பின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையேற்று, 2005 – 2006 காலப்பகுதியில் கணிதபுள்ளிவிபரவியல் துறைத்தலைவராகப் பதவியேற்றார். 2009 – 2012 காலப்பகுதியில் பிரதம விருந்தினர் அவர்கள் பேராசிரியர் பட்டத்தை பெற்றுக்கொண்டார். 2013 – 2016 காலப் பகுதியில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பப் பீடாதிபதியாகக் கடமையாற்றி இன்று கணிதத்துறையின் பேராசிரியராகத் தனது சேவையைத் தொடர்கின்றார்.

கணிதத்துறையின் சிகரமாகத் திகழும் பேராசிரியர் அவர்கள் திரு ரட்ணசபாபதி (முன்னைநாள் அதிபர் யா/நெல்லியடி மத்திய கல்லூரி, யா/ஹாட்லிக் கல்லூரி ) அவர்களின் விருப்பத்திற்குரிய மாணவராவார். கணிதத்துறையின் புகழ்பூத்த வடமராட்சிப் பிரதேசத்தின் பேராசிரியர்கள் வரிசையிலே Professor Nadarajah , Professor Eliehsar, Professor Thayanithy அவர்களை அடுத்து இடம் பெறுபவர் Professor S.Srisatkunarajah ஆவார்.

திருமதி சிவராணி சிறீசற்குணராஜா அவர்கள் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யா/வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்று மொழியியல் துறையில் விஷேட பட்டம் பெற்று பின் கல்வி தத்துவமானிப் பட்டத்தினை யாழ் பல்கலைக்கழகம், எடின்பரோ பல்கலைக்கழகம் என்பவற்றில் பெற்று இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகச் சேவைபுரிகின்றார். இவர் முன்னைநாள் மொழியியல் மற்றும் ஆங்கில துறையின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் நடனம் (பரதம்), விளையாட்டு(வலைப்பந்து, ஹொக்கி) என்பவற்றில் மிகுந்த ஆர்வமும் திறமையும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது செல்வப்புத்திரன் ஸ்ரீசங்கர்ஷன் யாழ் இந்துக் கல்லூாயில் தரம் 9 இல் கல்வி கற்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சிப் பிரதேசத்தின் பெண்கள் பாடசாலைகளில் ஒன்றான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1868.05.07 ஆரம்பிக்கப்பட்டு 150$^{வது}$ அகவையை அடைந்துள்ளது. நீண்ட வரலாற்றையும் பழம் பெருமைகளையும் கொண்ட எமது கல்லூரியின் மறைந்த

அதிபர்களினது ஆசிகள், மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரதும் ஆலோசனைகளும் வாழ்த்துக்களும் என்றும் எமக்குத் துணைபுரியும்.

அறிவுசார் பொருளாதாரத்திற்கான மானிடமூலதனத்தை உருவாக்கும் பிரதான இடமான பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்குமான தரமான கல்வியை வழங்குவதற்காக காலவரையற்ற நேரவரையற்ற சேவையை வழங்கி மாணவர்கள் இதயத்தில் எமது ஆசிரியர்கள் இடம் பிடித்துள்ளனர்.

## எமது கல்லூரியின் முகாமைத்துவக்குழு:

பாடசாலையின் அதிபருடன் இணைந்து மூன்று பிரதி அதிபர்கள் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருமதி ஆ.சிவகுமாரன் அவர்கள் பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளையும் திருமதி ஸ்ரீ.சுபேந்திரன் அவர்கள் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளையும் திரு இ.சுதர்சன் அவர்கள் முகாமைத்துவச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். பகுதித் தலைவர்களாக திருமதி சி. கிருஸ்ணகுமார், திருமதி இ.பபாலகிருஸ்ணன் என்போர் கடமையாற்றுகின்றனர். இவர்களுடன் இணைந்து சிரேஷ்ட ஆசிரியர்களான திரு S.சிவலிங்கம், திரு A.யோகேந்திரன், திரு T.சிவகுமாரன், திரு K.மனோகரன், திரு S.மதியழகன், திருமதி M.சிவராஜா, திருமதி P.வெங்கடேஸ்வரன், செல்வி Y.வல்லிபுரம், திருமதி V.இராஜேந்திரன், செல்வி R.கதிரவேல், திருமதி S.மகாராஜா, திருமதி P.குழந்தைவேல்,திருமதி S. சிறீகணேஷன், திருமதி K. முருகதாஸ் ஆகியோர் சேவையாற்றி வருகின்றனர்.

## ஆசிரியவளம்

எமது பாடசாலையின் சாதனைகளுக்கெல்லாம் காரணமாகத் திகழ்பவர்கள் எமது ஆசிரியர்களே. தமக்கு பணிக்கப்படும் கடமைகளையும் பொறுப்புகளையும் இன்முகத்துடன் ஏற்று செயற்படுகின்றனர்.பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக காலை நேர, மாலை நேர வகுப்புகளும், விடுமுறைக் காலங்களில் மேலதிக வகுப்புகளும் நடைபெறுகின்றன. அர்ப்பணிப்புடன் அயராது உழைக்கும் இவர்கள் என்றும் மாணவர்கள் இதயத்தில் பதிந்திருப்பர்.

| ஆசிரிய வகை | எண்ணிக்கை |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 30 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 31 |
| முகிழ்நிலை ஆசிரியர்கள் | 03 |
| பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் | 03 |

இங்கு மொத்தமாக 67 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். ஆங்கில ஆசிரியர்கள், ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள், க.பொ.த (உ/த) தொழில் நுட்பத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவுகின்றது. மேலும் வருடந்தோறும் யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரி தமது முகிழ்நிலை ஆசிரியர்களை எமக்கு வழங்கிவருகின்றது. அவ்வகையில் செல்வி க.தேன்மொழி(ஆங்கிலம்), செல்வி யோ.கார்த்திகா(விஞ்ஞானம்), திரு அ.பிரஷோத்(கணிதம்) ஆகியோர் வழங்கிய சேவையை நாம் என்றும் மறக்கமுடியாது. இவர்கள் பாடசாலையில் சேவையாற்றும் இதர ஆசிரியர்களுடன் இணைந்து பாடசாலையில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளிலும் பங்கேற்பது பாராட்டுதற்குரிய விடயமாகும்.

இக்காலப்பகுதியில் திருமதி V.ரமேஸ்(ஆரம்பப்பிரிவு), திருமதி P.துஷ்யந்தன் (நாடகமும்அரங்கியலும்), திருமதி B..ஸ்ரீஸ்குமார்(ஆங்கிலம்) திருT..தனேஸ்வரன் (ஆரம்பப்பிரிவு) ஆகியோர் எம் ஆசிரிய குழாத்துடன் புதிதாக இணைந்துள்ளனர். திருமதி தயாளினி ஜெயக்குமார்(ஆங்கிலம்) அவர்கள் மாற்றலாகிச் சென்றுள்ளார். அத்துடன் பகுதிநேர ஆசிரியரான செல்வி S.சிவபாலுகா உயர்தொழினுட்பக்கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை தொடர்வதற்காக சென்றுள்ளளார். இவர்களது சேவை போற்றுதற்குரியது. எம்முடன் சேவையாற்றிய செல்வி சோபிகா விக்னேஸ்வரன் (உயிரியல்) அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்டார். அத்துடன் எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் திரு S.கலாதீபன் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையினூடாக கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் ஆசிரியை திருமதி.A.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு மேலதிகமாக மாணவர் நலநோன்பு நடவடிக்கைகளில் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அலுவலக உதவியாளர் திருமதி V. பத்மசுந்தரம் இளைப்பாறிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்விசாரா ஊழியர்கள்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆய்வுகூட உதவியாளர் | 01 |
| நூலக உதவியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் | 02 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 |

கல்விசாரா ஊழியர்களான திருமதி ஜெ.குணேஸ்வரன் (நூலகம்),திருமதி சு.இராமச்சந்திரன் (ஆய்வுகூடம்),திருமதி உ.யசிந்தன் (அலுவலகம்),திரு க.கிருபாகரன் (அலுவலகம்) என்போர் கடமையாற்றி வருகின்றனர்.

எமதுபாடசாலையின் நூலகமானது நூலக விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைந்து காணப்படுவது சிறப்பாகும்.. 2017 ம் ஆண்டு எமது நூலகம் மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்தது, இங்கு ஏறக்குறைய 5500 நூல்கள் காணப்படுகின்றன இங்கு மாணவர்கள் ஆசிரியர்கள் பாவனை சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. திருமதி ஜெ.குணேஸ்வரன் அவர்களின் பொறுப்பும் செயற்பாடும் இதற்கான காரணமெனில் அது மிகையாது. திருமதி சு.இராமச்சந்திரன் ஆய்வுகூட உதவியாராக ஆய்வு கூடத்தின் உபகரணங்களையும் அவற்றின் பதிவுகளையும் சிறப்பாக மேற்கொள்வதுடன் ஆசிரியர் மாணவர் தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கணனிமையப்படுத்தி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்புத் தருவது குறிப்பிடத்தக்கது. மேலும் திருமதி உ.யசிந்தன், திரு க.கிருபாகரன் என்போர்களது தன்னலமற்ற சேவை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அவர்களது பங்களிப்பு, பாடசாலை நேரத்திற்குப் மேலதிகமாக அவர்களது சேவைகள் என்பன பாராட்டுதற்குரியன.

## மாணவ வளம்

எமது பாடசாலையின் அயற்பிரதேசங்களான இமையாணன், கம்பர்மலை, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கரணவாய் ஆகிய பிரதேசங்களில் இருந்து மாணவர்கள் வருகை தந்து கல்வி கற்கின்றார்கள்.

| பிரிவு | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| ஆரம்பப்பிரிவு | 293 |
| கனிஷ்ட இடைநிலைப்பிரிவு | 438 |
| சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு | 231 |

## பௌதீகவளம்

வினைத்திறன் மிக்க பாடசாலையொன்றின் குறிகாட்டிகளாக அமைவது கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் பரீட்சைப் பெறுபேறுகள். இவற்றிற்கு அடுத்தநிலையில் பாடசாலையின் கவின்நிலை மற்றும் பௌதீகவளம்,அமைவு என்பன குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பௌதீகவளங்களின் கிடைப்பனவு எமது பாடசாலையில் பகுதிபகுதியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவ்வருடம் கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்பதற்கான பாட அறை 30'X20' அளவுப் பிரமாணத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் நிகழ்ச்சித்திட்டத்தில்

அமைக்கப்பட்டுள்ளது. NSPS ஆதரவுடன் இடைநிலைப் பிரிவிற்கான கணித விஞ்ஞான தொழில்நுட்பப்பிரிவிற்கான ஆய்வுகூடம் (85′ X40′X2′) அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.எனினும் பற்றாக்குறையான பௌதீக வளங்களாகப் பின்வருவன அடையாளம் காணப்பட்டுள்ளன

1. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான நூல்நிலையம்
2. உள்ளக விளையாட்டு அரங்கு
3. தொகுதிப்பாடங்களுக்கான வகுப்பறை

பெருமளவான பெருவிளையாட்டுக்களில் எமது மாணவிகள் பங்குபற்றியபோதும் உள்ளக விளையாட்டுக்களில் மாணவர்களின் பங்குபற்றல் குறைவாகக் காணப்படுகின்றமையால் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றினை அமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

## கல்விச் செயற்பாடுகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த வருடம் 17 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனைபடைத்துள்ளார்கள். அவர்களது விபரம் வருமாறு

| தொ.இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1 | செந்துஜி செல்வானந்தம் | 183 |
| 2 | நதுஷா பிரதாப் | 182 |
| 3 | ஆராதனா மனோகரன் | 181 |
| 4 | நிரஞ்சனா புஷ்பராசா | 181 |
| 5 | ஆஷா கிருபானந்தன் | 170 |
| 6 | சுலக்ஷி கிருஷ்ணலிங்கம் | 167 |
| 7 | சுவப்ரதாரா ரவீந்திரன் | 166 |
| 8 | லாவண்யா தனபாலசிங்கம் | 166 |
| 9 | பிறேமிதா பிறேமதாஸ் | 165 |
| 10 | நிந்துஜா ஞானச்சந்திரன் | 164 |
| 11 | தருக்ஷினி குமணன் | 160 |
| 12 | பர்மிதா புவீஸ்வரன் | 160 |
| 13 | அபிஷேகா சந்திரமோகன் | 160 |
| 14 | சுபஸ்தி கிருஷ்ணலிங்கம் | 159 |
| 15 | சாகித்யா ருவேந்திரா | 156 |
| 16 | மோசிகா தர்மசீலன் | 155 |
| 17 | நதுமிஷா ராஜவர்மன் | 155 |

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் | - 73 |
| சித்தி பெற்றோர் | - 17 |
| 100 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் | - 40 |
| 70 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் | - 60 |

**க.பொ.த (சா/த) பரீட்சையில் கடந்த வருடம் 23 மாணவிகள் 5A க்கு மேல் பெற்று சாதனைபடைத்துள்ளார்கள். அவர்களது விபரம் வருமாறு**

| தொ.இல | மாணவர் பெயர் | பெற்ற தரம் |
|---|---|---|
| 1 | ஆர்த்திகா சாந்தருபன் | 9A |
| 2 | ஜெயகௌரி சோதீஸ்வரன் | 9A |
| 3 | மதுசிகா தில்லைநடராஜா | 9A |
| 4 | அபிஷா கந்தமூர்த்தி | 9A |
| 5 | ஹம்சபிரியா கிருஸ்ணகுமார் | 8A 1B |
| 6 | சாருஜா ரவீந்திரன் | 8A 1B |
| 7 | சாத்வீகா ராஜேஸ்வரன் | 8A 1B |
| 8 | தனபைரவி கிருபாகரன் | 8A 1B |
| 9 | யதுஷானி தேவராஜ் | 8A 1C |
| 10 | கேசிகா தயானந்தா | 8A 1C |
| 11 | நிந்துஷா தங்கவேல் | 8A 1C |
| 12 | நிலட்சனா பரமசிவம் | 7A 2B |
| 13 | சங்கவி மகாராஜா | 7A 2B |
| 14 | வைஷ்ணவி முத்துசாமிகுருநாதக்குருக்கள் | 7A 2C |
| 15 | சஹானா ரவிச்சந்திரன் | 7A 2C |
| 16 | கோபிகா ராஜேஸ்வரன் | 6A 2B 1C |
| 17 | சங்கவி துரைராஜா | 6A 2B 1C |
| 18 | விதுஷா விஜயராசா | 6A 1B 1C 1S |
| 19 | மேதுஷா ராஜராஜன் | 5A 4B |
| 20 | பிரதா அழகுராசா | 5A 2B 2C |
| 21 | வேணுஜா சிவகுமாரன் | 5A 2B 1C 1S |
| 22 | நிதர்சனா பரமசிவம் | 5A 2B 1C 1S |
| 23 | தீபிகா சந்திரபாலா | 5A 3C 1S |

| தோற்றியோர் | க.பொ.த(உ/த) கற்கத் தகுதி பெற்றோர் | சித்திவீதம் |
|---|---|---|
| 68 | 50 | 74% |

## க.பொ.த உயர்தரத்தில் முன்னணிப்பெறுபேறு – 2017

**கணிதம்:**

| | |
|---|---|
| மிதுலா தர்மராசா | 1A 1B 1C |
| பிரியங்கா பெரியதம்பி | 1A 2B |
| நவஜோதி நவேந்திரன் | 3B |
| வினோதினி செல்வரெட்ணம | 1B 2C |

**விஞ்ஞானம்:**

| | |
|---|---|
| பவித்திரா பாலசுந்தரம் | 1B 2C |
| பாரதி பாலசுப்பிரமணியம | 1B2C |
| மாதுளா மனோகரன் | 1B2C |
| நிவேதினி தவநேசன் | 3C |

**வர்த்தகம்:**

| | |
|---|---|
| ருக்ஷினி சுப்பிரமணியம | 3A |
| பவநிதா கிருஷ்ணபவன் | 2A 1B |
| பாலகங்கா விநாயகமூர்த்தி | 2A1B |

**கலை:**

| | |
|---|---|
| குளோசிகா விஜயரட்ணம் | 2A 1B |
| கஜலக்ஷி ரஷ்யசீலன் | 2A 1B |
| துளசிகா வீரசிங்கக்குருக்கள் | 2A1B |
| விஜீபா சீவரத்தினம் | 1A 2B |
| ஜெயப்பிரியா இரத்தினசிங்கம் | 2A1C |

**2017 இல் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைத்தோர் விபரம்:**

| தொ.இல | பெயர் | கற்கைநெறி |
|---|---|---|
| 1 | செல்வி பிரியங்கா கந்தசாமி | மருத்துவம் |
| 2 | செல்வி ரம்யாசுபாஸ்கரன் | உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 3 | செல்வி கஜானி கிருஷ்ணகுமார் | அளவையியல் விஞ்ஞானம் |
| 4 | செல்வி வராஜினி சுப்பிரமணியம் | பௌதீக விஞ்ஞானம் |
| 5 | செல்வி ஜெயந்தினி சண்முகராஜா | உயிரியல் விஞ்ஞானம் |
| 6 | செல்வி நந்தினி நல்லநாதன் | மென்பொருள் பொறியியல் |
| 7 | செல்வி நவஜோதி நவேந்திரன் | வியாபார விஞ்ஞானம் |
| 8 | செல்வி டிஷாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா | பௌதீக விஞ்ஞானம் |
| 9 | செல்வி பிரியங்கா பெரியதம்பி | பௌதீக விஞ்ஞானம் |
| 10 | செல்வி தர்சினி நவரத்தினம் | விவசாய விஞ்ஞானம் |
| 11 | செல்வி மாதுளா மனோகரன் | உயிரியல் விஞ்ஞானம் |
| 12 | செல்வி யாமினி கருணாகரன் | சித்த மருத்துவம் |
| 13 | செல்வி பாரதி பாலசுப்பிரமணியம் | சித்த மருத்துவம் |
| 14 | செல்வி தர்சினி நகுலேஸ்வரன் | முகாமைத்துவம் |
| 15 | செல்வி மனோரஞ்சினி மகேஸ்வரன் | வர்த்தகம் |
| 16 | செல்வி டிலேஷியா யுகந்தன் | கலை |
| 17 | செல்வி ஜெயச்சந்திக்கா தவராசா | கலை |
| 18 | செல்வி கிருஷாயினி ரவீந்திரன் | கலை |
| 19 | செல்வி யதுர்சிகா ரவீந்திரன | கலை |
| 20 | செல்வி பரணிகா பரமேஸ்வரமூர்த்தி | கலை |
| 21 | செல்வி நிபேதிகா கந்தசாமி | நுண்கலை |

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்:

2017ம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் நிகழ்வில் ஆரம்பப் பிரிவிற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் கௌரவ சந்திரசேகரம் சுகிர்தன் அவர்களும் இடைநிலைப் பிரிவிற்கு முன்னை நாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு சிற்றம்பலம் புஸ்பலிங்கம் அவர்களும் குடும்ப சமேதராக வருகை தந்து சிறப்பித்தனர். விளையாட்டு ஆசிரியர்களான திருமதி அ.பாஸ்கரன்,

திருமதி ஜெ.தீதன் திருமதி அ.டனிஸ் மூவரினதும் வழிகாட்டலின் பேரில் இல்ல மெய்வல்லுனர் நிகழ்வுகளுடன் கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டத்தில் மெய்வல்லுனர் நிகழ்வுகளிலும் பெரு விளையாட்டுக்களிலும் எமது மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

## மெய்வல்லுனர் நிகழ்வுகளின் பெறுபேறுகள் - 2017

| மாணவர் பெயர் | வயதுப்பிரிவு | நிகழ்ச்சி | வலயம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|
| S.ரம்ஜா | 12 | உயரம்பாய்தல் | 1 | பங்குபற்றியமை | |
| J.சரண்ஜா | 14 | 80m .H | 2 | பங்குபற்றியமை | |
| N.ரக்சனா | 16 | நீளம்பாய்தல<br>100m | 1<br>1<br>1 | 7<br>பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| N.சொப்பனா | 16 | 400m<br>800m | 1<br>1 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| S.லக்சிகா | 16 | 100m .H<br>குண்டுபோடுதல் | 2<br>2 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| K.நிலானி | 16 | 100m.H | 1 | பங்குபற்றியமை | |
| P.நிதர்சனா | 18 | முப்பாய்ச்சல் | 1 | 6 | |
| S.சஜீபா | 18 | குண்டுபோடல்<br>தட்டுஎறிதல் | 1<br>2 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| S.ஆரணி | 20 | 100m<br>தட்டெறிதல்<br>நீளம்பாய்தல் | 1<br>1<br>1 | 1 | 6 |
| B.ஜனுசல்யா | 20 | 100m<br>முப்பாய்ச்சல் | 2<br>1 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| A.ஜெபிக்கா | 20 | 200m | 1 | 2 | |
| S.சுகந்திகா | 20 | குண்டுபோடல்<br>தட்டெறிதல்<br>ஈட்டி எறிதல் | 2<br>2<br>1 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை | |
| K.மிதுலா | 20 | ஈட்டி எறிதல் | 2 | | |
| A..அபிநயா | 18 | 100m<br>200m<br>நீளம்பாய்தல் | 1<br>1<br>1 | 3 | 6 |

❖ எமது மாணவாகள் 18 நிகழ்வுகளில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

**அஞ்சலோட்டம்:**

| நிகழ்வு | பிரிவு | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|
| 4X100 | 16 | 1 | பங்குபற்றியமை |
| 4X400 | 16 | 1 | பங்குபற்றியமை |
| 4X100 | 18 | 1 | 3 |
| 4X100 | 20 | 1 | பங்குபற்றியமை |
| 4X400 | 20 | 1 | பங்குபற்றியமை |

வலய மற்றும் மாகாண மட்டங்களில் செல்வி ஆரணி சிவகுமார் 20 வயதுப்பிரிவில் 100m ஓட்டம், தட்டெறிதல்,நீளம் பாய்தல் என்பவற்றில் முதலாம் இடத்தையும் அபிநயா அருளானந்தம் 100m,200m ஓட்டங்கள், நீளம்பாய்தல் என்பவற்றில் முதலாம் இடத்தையும் பெற்று தேசியத்தில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றனர். அஞ்சலோட்டத்தில் பங்குபற்றிய அனைத்துப் பிரிவு வீராங்கனைகளும் வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

## பெரு விளையாட்டு நிகழ்வின் பெறுபேறு – 2017

| நிகழ்வு | பிரிவு | வலயம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|
| கரப்பந்து | 16 | 1 | 4 | |
| கரப்பந்து | 18 | 2 | 4 | |
| கரப்பந்து | 20 | 2 | பங்குபற்றியமை | |
| எறிபந்து | 17 | 2 | | |
| எறிபந்து | 20 | 2 | | |
| சதுரங்கம் | 17 | 3 | பங்குபற்றியமை | |
| சதுரங்கம் | 20 | 2 | 1 | 11 |

| | | | | |
|---|---|---|---|---|
| கடற்கரைகரப்பந்து | 20 | 1 | | பங்குபற்றியமை |
| கரம் | 17 | | பங்குபற்றியமை | |
| கரம் | 20 | | பங்குபற்றியமை | |

**தனிநபர் சதுரங்கம்**

| பெயர் | பிரிவு | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| பி.நதுஷா | 12 | 1 | 1 |
| செ.செந்துஜி | 10 | 1 | 2 |

பெருவிளையாட்டுக்களில் கரப்பந்து (16 வயதுப்பிரிவு) வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் கரப்பந்து (18,20 வயதுப்பிரிவு) இரண்டாம் இடத்தையும் எறிபந்து (17,20 வயதுப்பிரிவு) இரண்டாம் இடத்தையும் பெற்று மாகாணத்திற்குத் தெரிவாகியுள்ளனர். கடற்கரைகரப்பந்து20 வயதுப்பிரிவு வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்று தேசியத்தில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றனர்.சதுரங்கம் 20 வயதுப்பிரிவு மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியத்தில் 11ம் இடத்தைப் பெற்றனர். இந்தவகையில் இவ்வீராங்கனைகளை நெறிப்படுத்திய விளையாட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிப்பாளர்கள் திரு T. இராஜசிங்கம் (சதுரங்கம்),திரு V.ராகுலன் (எறிபந்து, கரப்பந்து) திரு S.ஜெயப்பிரதாபன் என்போர்க்கு பாடசாலைச் சமூகம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## தமிழ்த் தினப் போட்டி முடிவுகள் - 2017

| பெயர் | பிரிவு | நிகழ்வு | வலயம் |
|---|---|---|---|
| சா.ஆர்த்திகா | iii | இலக்கணம் | 1 |
| சே.சதுஸ்ரிகா | iii | பாவோதல் | 1 |
| கி.தனபைரவி | iv | நடனம் | 1 |

## English Day Competitions – 2017

| Name | Grade | Event | Zonal Level |
|---|---|---|---|
| B.Jensika | 3 | Recitation | 1 |
| S.Senthuji | 5 | Recitation | 1 |
| R.Geethanjali | 9 | Creative writing | 1 |
| S.Pameela | 10 | Copy writing | 1 |
| R.Sainthavi | 12 | oratory | 1 |
| P.Janusilka | 6 | Story Telling | 1 |
| S.Senthuji | 5 | Reading Aloud | 1 |
| K.Koshika | 3 | Story Telling | 1 |
| P.Nathusha | 5 | Story Telling | 1 |

❖ ஆங்கிலதினப் போட்டிகளில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தை 9 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

### சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் -2017

| பெயர் | தரம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|
| சா.ஆர்த்திகா | 11 | 1 | 1 |

### விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் -2017

| பெயர் | தரம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|
| சா.ஆர்த்திகா | 11 | 1 | 1 |
| க.அபிஷா | 11 | 3 | |

## அகில இலங்கைப் புத்தாக்கப் போட்டி முடிவுகள் -2017

| பெயர் | தரம் | விடயம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|
| ச.தனுஷா | 11 | தற்காலிக வளிப்பம்பி | தெரிவு | பங்குபற்றல் |
| க.அபிஷா | 11 | மீன் தொட்டி | தெரிவு | பங்குபற்றல் |

## பொதுப் போட்டி முடிவுகள் -2017

### இரண்டாம் மொழி சிங்களம்

| பெயர் | தரம் | நிகழ்வு | வலயம் |
|---|---|---|---|
| P.ஜனுசிகா | 6 | வாசிப்பு | 1 |
| S.சனாதனி | 6 | எழுத்து | 1 |

### கோலம் போடுதல்

| பெயர் | பிரிவு | வலயம் |
|---|---|---|
| லி.ரிஷானி | 1 | 1 |

### பண்ணிசைப் போட்டி

| பெயர் | பிரிவு | வலயம் |
|---|---|---|
| இ.பிரணவி | மத்திய பிரிவு | 1 |

### சிறுவர் தினப் போட்டி

| பெயர் | பிரிவு | நிகழ்வு | வலயம் |
|---|---|---|---|
| ச.கேதாரணி | மத்தியபிரிவு | பேச்சு | 1 |
| அ.அபிவர்ஷி | ஆரம்ப பிரிவு | ஓவியம் | 1 |
| க.நிதுஷா | கீழ்ப் பிரிவு | கவிதை | 1 |
| க.மதுரலக்ஷ்மி | மேற்பிரிவு | கவிதை | 1 |

**அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி -2017**

| பெயர் | பிரிவு | வலயம் | தேசியம் |
|---|---|---|---|
| இ.பிரணவி | மத்திய பிரிவு | 1 | 2 |

**Srilanka College Of Endocrinologists Multimedia Competition - National Level 2017**

| |
|---|
| K.Piriyanka<br>S.Jasmina<br>V.Sangeetha<br>J.Kirusika<br>V.Abinaya |

**சுகவாழ்வுப் பேரவை கட்டுரைப் போட்டி -2017**

| பெயர் | நிகழ்வு | மாவட்டம் |
|---|---|---|
| வீ.துவாரகா | கட்டுரை | அதிவிசேடம் |

**பிரதேச இலக்கிய விழா -2017**

| பெயர் | நிகழ்வு | மாவட்டம் |
|---|---|---|
| த.பிரணாளினி | கையெழுத்துப் போட்டி | 3 |

## பாடசாலை சமூக ஒருங்கிணைப்பு

உடுப்பிட்டி வல்வெட்டித்துறை பிரதேச சமூகநலனோம்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் களமாக எமது பாடசாலை விளங்குகின்றது. எமது பாடசாலையில் நடைபெற்ற வெளிக்கள செயற்பாடுகளாவன

1. தென் இலங்கை பௌத்தமத குருக்களினதும் மலேஷிய பௌத்தமத குருக்களினதும் அனுசரணையுடன் இனங்காணப்பட்ட வறிய மாணவர்களுக்கான பாடசாலை உபகரண அன்பளிப்பு
2. வலயக்கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட தரம் 11 மாணவர்க்கான சங்கீத பாட செய்முறை நிகழ்ச்சித் திட்டம்
3. வலயக்கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட தரம் 5 மாணவர்க்கான புலமைப்பரிசில் கருத்தரங்கு
4. கரவெட்டிப் பிரதேச சபையினரால் ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் செயற்பாடுகள்
5. யாழ்ப்பாண சாந்தியக நிலையத்தினால் வலுவிழந்தோர் ஊக்குவிப்பு நிதிசேகரிப்பு செயற்பாடுகள்
6.கரவெட்டி பிரதேச செயலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட போதை ஒழிப்பு விழிப்புணர்வுகட கருத்தரங்கு

## மன்றங்களின் செயற்பாடுகள்

எமது கல்லூரியில் புதன்கிழமை தோறும் இறுதிப்பாட வேளை மன்றப் பொறுப்பாசிரியர்களின் தலைமையில் மாணவ மன்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இவை மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள் ஆளுமை, விருத்திச் செயற்பாடுகள் தலைமைத்துவப் பண்புகள் என்பவற்றை வளர்ப்பதாக அமைகின்றன. டெங்கு ஒழிப்பு, நன்னீர்ப் பாவனை, போதைப் பொருள் ஒழிப்பு,சுத்தமும் சுகாதாரப் பழக்க வழக்கங்களும் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திரு ந. பிரபாகரன் அவர்களின் பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற புத்தாக்க நிகழ்வுகள் கண்டுபிடிப்புகள் தொடர்பான செயற்பாடுகளும் இந்து மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற வாணிவிழா நிகழ்வுகள் கிறிஸ்தவ மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற ஒளிவிழா நடவடிக்கைகள் பஸ்கா ஆராதனைகள் மன்றச் செயற்பாடுகளுக்கு மெருகூட்டுகின்றன.

தமிழ் மன்றத்தினால் தமிழ்மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள் ஆங்கில மன்றத்தினால் நடாத்தப்படும் மொழிவிருத்திச் செயற்பாடுகள் திறம்பட நடைபெறுகின்றன.

**மன்றங்களும் பொறுப்பாசிரியர்களும்**

இந்து மன்றம் - திருமதி பு. வெங்கடேஸ்வரன்

தமிழ் மன்றம் - திருமதி ப. குழந்தைவேல்

ஆங்கில மன்றம் - திரு செ. மதியழகன்

கணித விஞ்ஞான மன்றம் - திரு சு. சிவலிங்கம்

திரு த. சிவகுமாரன்

கிறிஸ்தவ மன்றம் - திரு அ. யோகேந்திரன்

-திருமதி கீதாமரியதாஸ்

சமூக விஞ்ஞான மன்றம் - திரு இ.தர்மசீலன்

சுகாதார மன்றம் - திருமதி அ. பாஸ்கரன்

விளையாட்டுக்கழகம் - திருமதி அ. பாஸ்கரன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

பாடசாலை அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பிரதான காரணியாக அமைகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வலயப்பிரதிநிதியாக திருமதி அ. பஞ்சலிங்கம் செயற்படுகின்றார்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள்:**

தலைவர் - திருமதி கௌரி சேதுராஜா (அதிபர்)

பிரதி அதிபர்கள் - திருமதி ஆ.சிவகுமாரன்
- திருமதி ஸ்ரீ. சுபேந்திரன்
- திரு இ.சுதர்சன்

செயலாளர் - திரு அ.ஞானேந்திரன்

பொருளாளர் - திருமதி ம. கிருஷ்ணகுமார்

ஆசிரிய உறுப்பினர்கள்- திரு சு. சிவலிங்கம்

- திரு த. சிவகுமாரன்
- திரு கு .மனோகரன்
- திருமதி இ.பாலகிருஸ்ணன்
- திருமதி சி. கிருஸ்ணகுமார்
- திருமதி பு. வெங்கடேஸ்வரன்

பெற்றோர்கள் - திரு த.தயாளன்
- திரு கா.யோகராஜா
- தரு தி .சிவகுமார்
- திரு க.கிருபாகரன்

பழைய மாணவசங்கப்பிரதிநிதிகள் - திருமதி L.M.N யோசப்

- திருமதி த.அம்பிகைபாகன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆற்றிய சேவைகள்:**

1.கிறிஸ்தவ பாட அறை (80′ X30′) பிரமாணம் - ரூ. 2மில்லியன்

2.ஆரம்பக் கல்வி வகுப்பறைகளுக்கான தீந்தை பூசியமை - ரூ.60000

3.வலைப்பந்தாட்ட திடல் புனருத்தாரணம் - ரூ. 35000

4.உயரம் பாய்தல் திடல் அமைத்தமை - ரூ. 10000

5.சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற செயற்பாடுகள்

i. டெங்கு ஒழிப்பு

ii. ஆபத்தை உண்டு பண்ணக்கூடிய மரங்கள் தறித்தல் - ரூ 53000

6. வகுப்பறைகளுக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்தல் - ரூ 65000

7. வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி

i. ஆரம்பப்பிரிவு - ரூ 30000

ii. இடைநிலைப்பிரிவு - ரூ 30000

8. வருடாந்த பரிசளிப்பு விழா - ரூ.30000

**பழைய மாணவர் சங்கம்**

பழைய மாணவ சங்கத் தாய்ச் சங்கத்தினுடைய தலைவியாக செல்வி ச. வேலுப்பிள்ளை அவர்களும் பொருளாளராக திருமதி ச. பிறேமறஞ்சித் அவர்களும் செயற்படுகின்றனர்.கனடா, சுவிற்ஸலாந்து,இலண்டன், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் இருந்து பழைய மாணவிகளின் ஒத்துழைப்பும் அனுசரணையும் எமது பாடசாலைக்குக் கடைத்த வண்ணம் இருக்கின்றது.இவர்கள் பாடசாலையின் பௌதீக பண்பாட்டு வள அபிவிருத்தி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் மிகுந்த கரிசனை கொள்வதுடன் பாடசாலையின் பாரம்பரியங்களைப் பேணுவதில் முனைப்புடன் செயற்படுவது போற்றுதற்குரியது.

போதிய ஆசிரிய வளம் காணப்படாதவிடத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முடங்காவகையில் வேதனம் வழங்கி செயற்பாடுகளை முன்னெடுப்பது மகத்தான சேவையாக உள்ளது. ஆங்கில மொழி இரண்டாம் மொழி கற்றலுக்காக ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளாக மாதாந்தம் 9000 ரூபாவினை வழங்கி வருவதுடன் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளுக்கான உபசரணைகள் , வெற்றி பெற்ற மாணவர்க்கான கேடயங்கள் வீராங்கனைகள் மாவட்ட மாகாண தேசிய மட்ட போட்டிகளுக்குச் செல்வதற்கான செலவுகளுக்கான அனைத்து அனுசரணைகளையும் வழங்கி வருகின்றது. கணனி வள நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவிக்கான கொடப்பனவையும் எமது பழைய மாணவ சங்கமே வழங்கி வருகின்றது.

## பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் பரிசில்கள்

1. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்க்கான வெற்றிக் கேடயம் பழைய மாணவர்களான திருமதி J. சாரதா திருமதி L.N. யோசப் திருமதி K. தேவராசா திருமதி Y. கிருபனா அவர்களால் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது
2. க.பொ.த (சா/த) பரீட்சையில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்க்கான பணப்பரிசில் முன்னை நாள் அதிபர் திருமதி கி. மதியாபரணம் நினைவாக வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.
3. க.பொ.த (உ/த) பரீட்சையில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்க்கான பணப்பரிசில் முன்னை நாள் அதிபர் செல்வி R.J.Mann. நினைவாக வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.
4. பாடசாலையின் சிறந்த மாணவிக்கான கேடயம் முன்னை நாள் அதிபர் செல்வி லீ. வன்னியசிங்கம் நினைவாக வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.
5. பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்தமாக கணிதத்துறையில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவிக்கான பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

## பல்கலைக்கழகத்திற்கு செல்கின்ற மாணவர்களுக்கான சிறப்புப் பரிசில்கள்

திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்களின் நினைவாக ரூ 500000 இன் வட்டிப்பணம் (52250/= ) பல்கலைக்கழகத்திற்கு செல்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது

| தொ.இல | பெயர் | கற்கைநெறி |
|---|---|---|
| 1 | செல்வி ரம்யா சுபாஸ்கரன் | உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் |
| 2 | செல்வி வராஜினி சுப்பிரமணியம் | பௌதீக விஞ்ஞானம் |
| 3 | செல்வி ஜெயந்தினி சண்முகராஜா | உயிரியல் விஞ்ஞானம் |
| 4 | செல்வி யாமினி கருணாகரன் | சித்த மருத்துவம் |
| 5 | செல்வி மிதுலா தர்மராசா | விஞ்ஞான பீடம் |
| 6 | செல்வி பிரியங்கா பெரியதம்பி | விஞ்ஞான பீடம் |
| 7 | செல்வி ருக்ஷினி சுப்பிரமணியம | முகாமைத்துவம் |
| 8 | செல்வி பவநிதா கிருஷ்ணபவன் | முகாமைத்துவம் |
| 9 | செல்வி பாலகங்கா விநாயகமூர்த்தி | முகாமைத்துவம் |
| 10 | செல்வி குளோசிகா விஜயரட்ணம் | கலை |
| 11 | செல்வி கஜலக்ஷி ரஷ்யசீலன | கலை |
| 12 | செல்வி துளசிகா வீரசிங்கக்குருக்கள | கலை |
| 13 | செல்வி விஜீபா சீவரத்தினம் | கலை |
| 14 | செல்வி ஜெயப்பிரியா இரத்தினசிங்கம் | கலை |

திருமதி இந்திராணி பாஸ்கரன் அவர்களின் நினைவாக ரூ 150000 இன் வட்டிப்பணம் (15725/= )பல்கலைக்கழகத்திற்கு செல்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது

| | | |
|---|---|---|
| 1 | செல்வி மிதுலா தர்மராசா | கணிதம் |
| 2 | செல்வி மாதுளா மனோகரன் | விஞ்ஞானம் |
| 3 | செல்வி பவநிதா கிருஷ்ணபவன் | முகாமைத்துவம் |
| 4 | செல்வி குளோசிகா விஜயரெட்ணம் | கலை |

## மாதாந்தம் மாணவர்கள் பெறும் கொடுப்பனவுகள்

1.வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் முகமாக NCC புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கொடுப்பனவு தலா ரூ 500 வீதம் ஐவருக்கு - ரூ 2500

இடைநிலைப்பிரிவு 6,7,8 மாணவர்க்கு தலா ரூ 1000 வீதம் 15 பேர் - ரூ 15000

2. கனிஷ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்க்கு தலா ரூ 100 வீதம் 10 பேர் - ரூ 1000. சமூகச்சுடர் திரு ந.பாஸ்கரன் அவர்கள் வழங்கி வருகின்றார்.

3. க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தலா ரூ 1000 வீதம் மாதாந்தம் ரூ 4000 வழங்கப்படுகின்றது. இதனை அவுஸ்ரேலியாவில் வாரும் திரு மா. சுரேந்திரன் அவர்கள் வழங்கி வருகின்றார்.

## வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பாடசாலையின் பௌதீக வள விருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட நிதிப் பங்களிப்பு

| | பெயர் | தலைப்பு | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு M.K சிவாஜிலிங்கம் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 1100000/= |
| 2 | திரு சி. அகிலதாஸ் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 200000/= |
| 3 | திரு க. தர்மலிங்கம் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 100000/= |
| 4 | திரு ச. சுகிர்தன் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 500000/= |
| 5 | திரு ஆ.பரஞ்சோதி | ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளுக்கு தீந்தை பூசுதல் | 60000/= |

**சமூக சேவை நிறுவனங்கள் பாடசாலையின் பௌதீக வள விருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட நிதிப் பங்களிப்பு**

| பெயர் | தலைப்பு | தொகை |
|---|---|---|
| திரு கணேஷ்வரன் வேலாயுதம் (சிவன்அறக்கட்டளை நிலையம்) | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 50000/= |

**நலன் விரும்பிகளால் பாடசாலையின் பௌதீக வள விருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட நிதிப் பங்களிப்பு**

| | பெயர் | தலைப்பு | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு அ.யோகேந்திரன் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 50000/= |
| 2 | திருமதிஎலிசபெத்சூசைப்பிள்ளை | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 25000/= |
| 3 | பெற்றோர் | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 49000/= |
| 4 | நல்ல மேய்ப்பன் சபை | கிறிஸ்தவபாடஅறை அமைத்தல | 10000/= |

**அன்பளிப்பு விபரம்**

| | விபரம் | உபகரணம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் | பிளாஸ்ரிக் கதிரைகள்(11) | 10000/= |
| 2 | நலன்விரும்பிகள் | பிளாஸ்ரிக் கதிரைகள்(72) | 60000/= |
| 3 | பழைய மாணவி (S.சுபாஜினி) | High jump Stand | 10000/= |
| 4 | பழைய மாணவி (Mrs S.Raveendran) | Refrigirator | 50000/= |
| 5 | நலன்விரும்பி | Paralalogram Board | 50000/= |
| 6 | திருமதி அ.ஜெகதீஸ்வரன் | Steel Cupboard | 11000/= |
| 7 | செல்வி குலோசனா(பழைய மாணவி) | Steel Cupboard | 12000/= |
| 8 | திரு அ.தங்கவேல் | 100 அப்பியாசக் கொப்பிகள் | 10000/= |
| 9 | திரு செல்வநாயகம் Diretor Standford Tution) | பரிசில்தினத்தை ஒட்டி வழங்கியமை | 5000/= |
| 10 | திரு.த.சுதர்சன்(கிராமஉத்தியோகத்தர் | பரிசில்தினத்தை ஒட்டிவழங்கியமை | 2000/= |

Print By : Civaruamnet, Chunnakam - 0775618634